பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை (30-10-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 337

வடக்குப் படைகளுக்கு தைரியமூட்ட பிரதமர் விஜேதுங்க நேரில் விஜயம்

சிறில், ஹமில்டன் குழுவும் வருகை

கொழும்பு, அக்டோபர் 30

வடக்கு களத்தில் சோர்வடைந்த நிலையில் இருக்கும் படையினருக்கு தைரியமூட்டி அவர்களின் மனவலிமையை உயர்த்துவதற்காக பிரதமரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க வடக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கு நேற்று முன்தினம் நேரில் விஜயம் செய்தார்.

அவருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர் மார்ஷல் போல்டர் பெர்னாண்டோ, முப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ஆகியோரும் சென்றிருந்தனர்.

ஆனையிறவு, ஊர்காவற்றுறை, பலாலி, காரைநகர் ஆகிய முகாம்களுக்கு விஜயம் செய்த பிரதமர் அங்கு படை அதிகாரிகள் மற்றும் கிப்பாய்களின் சுக, நலன்களை விசாரித்து அறிந்து கொண்டார்

(2 ஆம் பக்கம் பார்க்க)

பிரேமாவைச் சந்திக்க சோனியா மறுப்பு!

சென்னை, அக். 30

இம்மாத முற்பகுதியில் ஜனாதிபதி பிரேமதாஸா புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியை அவரது வீட்டுக்குச் சென்று சந்திக்க விரும்பினாராம். ஆனால் பிரேமாவைச் சந்திக்க சோனியா மறுத்துவிட்டார்.

இந்திய சஞ்சிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

சார்க் அமைப்பின் தலைவர் என்ற முறையில் பிரேமதாஸா இந்தியாவுக்கு விஜயம் செய்தபோதே சோனியாவைச் சந்திக்க விரும்பினார்.

ராஜீவ் — ஜே. ஆர். ஒப்பந்தத்தை எதிர்த்தவர் பிரேமதாஸா. ஒப்பந்தத்தில் கையெழுத்திட ராஜீவ் காந்தி கொழும்பு சென்றபோது அங்கு ராஜீவை பிரேமதாஸா வரவேற்கவுமில்லை. அப்போது பிரதமராக இருந்த பிரேமதாஸா பிரதமர் ராஜீவின் நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரித்தார். இதை மனதில் வைத்தே "என் வீட்டுக்கு வரவேண்டாம்." என்று பிரேமாவுக்கு சொல்லி அனுப்பினாராம் சோனியா.

— இப்படி அச்சஞ்சிகை தெரிவித்துள்ளது. [உ]

நோர்வே தூதரக அதிகாரி நேற்று யாழ். வருகை

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் திரு. டுவீட்டா நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

நோர்வேயில் உள்ள ஈழத் தமிழர்கள் நிலை குறித்து முடிவு செய்வதற்கு முன்நடவடிக்கையாக இங்குள்ள நிலைவரத்தைக் கண்டறியவே அவர் இங்கு வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

திரு. டுவீட்டா யாழ்ப்பாணத்தில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து நிலைமைகளைக் கண்டறிவார்.

நோர்வேயில் சுமார் ஐயாயிரம் ஈழத்தமிழர்கள் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-5-165)

பழுதடைந்த கௌபியை விநியோகிப்பது ஏன்?

பொதுமக்கள் கேட்கிறார்கள்

யாழ்ப்பாணம், அக். 30

உளுத்துப்போன கௌபியை யாழ் செயலகத்தினர் ப. நோ. கூ சங்கங்கள் மூலம் நிவாரணமாக வழங்குவது ஏன்? அது மனித பாவனைக்கு உகந்ததல்ல என்று சுகாதாரப் பகுதியினர் ஆலோசனை கூறிய பின்னரும் தொடர்ந்தும் அதனை விநியோகிப்பதன் நோக்கம் என்ன?

— இவ்வாறு பொதுமக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

யாழ். மாவட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கென கொழும்பில் இருந்து கப்பல்மூலம் அனுப்பப்பட்ட பெருந்தொகையான கௌபி பழுதடைந்த நிலையிலேயே இங்கு வந்து சேர்ந்தது. அது மக்கள் பாவனைக்கு உதவாது என்றும் கால்நடைகளின் தீனாகவே அதனை பாவிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆனையிறவு 'பங்கரில்' பிரதமர்

கொழும்பு, அக். 30

ஸ்ரீலங்கா பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று முன்தினம் ஆனையிறவுக்கு விஜயம் செய்த போது அங்கு படையினரின் பங்கருக்குள் சென்று பார்வையிட்டார்.

இதனை நேற்று ரூபவாஹினி ஒளிபரப்பியது.

பெரும் எண்ணிக்கையான படையினர் கூடியிருக்க பிரதமர் ஒலிபெருக்கி மூலம் உரையாற்றியதும் காண்பிக்கப்பட்டது. (ஒ)

மக்களை அச்சுறுத்திய பொம்மர்!

யாழ்ப்பாணம். அக். 30

தெல்லிப்பளை, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டிப் பகுதிகளுக்கு மேலாக நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு ஒரு பொம்மரும், ஒரு ஹெலியும் பல தடவை வட்டமிட்டு மக்களை அச்சுறுத்தின.

இதேவேளை, பலாலி இராணுவ முகாமில் இருந்து அளவெட்டியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [ஒ-15]

புதன் இரவும் ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் புதன் கிழமை இரவும் 11 மணிக்கு வலிகாமம் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [ஒ-15-68]

கொக்கட்டிச்சோலை படுகொலைகள்:

19 இராணுவத்தினரும் விடுதலை செய்யப்பட்டனர்!

கொழும்பு, அக். 30

கொக்கட்டிச்சோலையில் 67 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 19 இராணுவத்தினரையும் அச்சம்பவத்தை விசாரித்த இராணுவ நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பான தனது விசாரணைகளை இராணுவ நீதிமன்றம் கடந்த 27 ஆம் திகதியுடன் முடித்துக் கொண்டது.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக லெப்டினன்ட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மனித உரிமை இயக்கங்கள் பலத்த கண்டனம் தெரிவிப்பு

கொழும்பு, அக். 30

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பான குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 19 இராணுவச் சிப்பாய்களும் விடுதலை செய்யப்பட்டதை மனித உரிமை இயக்கங்கள் கண்டித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக முன்னர் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு கொலைகளுக்கு இராணுவத்தினரே பொறுப்பு எனக் கூறியிருக்கையில், தற்போது இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

கொலைக் குற்றம் எவர் மீதும் இல்லை!

கொழும்பு, அக். 30

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திய இராணுவ நீதிமன்றம் எதிரிகள் எவர் மீதும் கொலைக் குற்றத்தை காணவில்லை என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

தமக்கு கீழ் இருந்த துருப்புகளைக் கட்டுப்படுத்தத் தவறினார் என்றும் —

அச்சடலங்களை எரிக்க அனுமதித்த குற்றத்தை லெப்டினன்ட் குடலிகம புரிந்துள்ளார் என்றும் மட்டுமே இராணுவ நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது எனவும் பி.பி.ஸி. குறிப்பிட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தாலேயே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க பி.பி.ஸிக்குத் தெரிவித்தார். [உ-10]

மருத்துவபீட மாணவர் நேற்று மறியல் போர்!

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று மாலை மருத்துவ பீட வளாகத்தில் மறியல் போரில் ஈடுபட்டனர்.

இதுபற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:-

மருத்துவ பீடத்திற்கு புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் நேற்று நண்பகல் தமது முதல் நாள் வகுப்புகளை முடித்துக்கொண்டு வெளியேறும் போது மருத்துவ பீட வளாகத்துக்குள் சைக்கிள்களை ஓடாமல் உருட்டிக் கொண்டு வந்தனர்.

அவ்வேளை அங்கு வந்த மருத்துவபீட உயர் அதிகாரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

நேற்றும் 'ராகிங்' சம்பவம்?

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிற்றுண்டிச் சாலையில் நேற்றுக் காலை ராகிங் சம்பவங்கள் நடைபெற்றதாகவும்—

அது குறித்து நேற்று விசாரணை நடைபெற்றதாகவும்— மருத்துவபீட உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சிரேஷ்ட மாணவர்கள் நால்வருக்கு எதிராக விசாரணை நடைபெற்றதாகவும் அவர் சொன்னார்.

ஆனால் நேற்றுக் காலை மருத்துவபீட சிற்றுண்டிச் சாலையில் 'ராகிங்' சம்பவம் ஏதும் இடம்பெறவில்லை என்றும்—

மாணவர் அறிமுகம் மட்டுமே இடம்பெற்றது என்றும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [உ 3]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி

கஸ்தூரி சண்முகலிங்கம்

கொக்குவில் கிழக்கு, பிரம்படி ஒழுங்கையைச் சேர்ந்த சண்முகலிங்கம் ஜெயமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி கஸ்தூரி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனதில்லத்தில் மிகவும் குதூகலமாக கொண்டாடுகின்றார். கஸ்தூரியை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரிமார், சித்தப்பாமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று, பல்லாண்டு காலம் வாழ்வென வாழ்த்துகின்றார்கள்.

[இ-3744]

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

1993 - ஆண்டு 6 அனுமதித் தேர்வு

1. மேற்படி பரீட்சை நடைபெறும் திகதி 14-11-92, சனிக்கிழமை.
2. பரீட்சைக்கான கிண்ணப்பங்கள் 04 - 11 - 1992 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
3. பரீட்சைக் கட்டணம் ரூபா 15/-.

– அதிபர்.

[இ-3642]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் வ. வடிவேலு கணேசமூர்த்தி

(முன்னாள் பிரபல வர்த்தகர் - பருத்தித்துறை V. V. K.)

மலர்வு: 13-05-1926 உதிர்வு: 30-09-1992

கடலின் உறைவிடமாய் பண்பின் இருப்பிடமாய் கனிவு மிகுந்த குணத்தினராய் வாழ்ந்த குடும்பத்தின் குலவிளக்கே மிகவும் முழங்காமல் காலன் உமையை கவர்ந்த வேளை என்ன நினைத்து எம்மைப் பிரிந்தீர்கள். உள்ளம் உருகி உமையை நினைத்து கண்ணீர் பெருக தறி அழுகிறோம்.

"திடீரென்று வந்தான் காலன்
திரியினிலே வெந்து உடல்
சாற்றினிலே கலந்தது ஆன்மா"

ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

எமது துக்கத்தில் கலந்து கொண்டு பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகள்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கல்வடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

[23081]

கவின் கலைகள் பயிலகம்

SCHOOL OF FINE ARTS

வழங்கும்

மாதாந்த இசை நிகழ்ச்சி

P. பிறேமானந்த சுந்தர் & அன்ரன் செல்லத்துரை இணைந்து தரும்

★ கிட்டார் இசை ★

தொடர்ந்து:
1. மாதாந்தப் பாடல்
2. திருமறைக் கலாமன்ற களப் பயிற்சி மாணவர்கள் நடிக்கும்

மாதொரு பாகம் [நாடகம்]

காலம்: 31-10-92 [சனி]
நேரம்: மாலை 6 00 மணி

பிரவேசம்: இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச்செயலாளர்
[இ/3644]

வடக்குப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவு, ஊர்காவற்றுறை முகாம்களில் வைத்தி அந்தந்த முகாம்களின் படை அதிகாரிகளுடன் பிரதமரும், அவரது குழுவினரும் சேச்சுக்களை நடத்தினர்.

பலாலி படை முகாமில் பிரதமரும் குழுவினரும் முப்படைகளின் அதிகாரிகளைச் சந்தித்து பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக ஆராய்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வடபகுதி பாதுகாப்பு படைகளின் தளபதி பிரிகேடியர் றோஹன் தலுவத்த, வடபகுதி கடற்படைத் தளபதி கப்டன் டி. கே. தஸநாயக்க, யாழ்ப்பாணம் தளபதி பிரிகேடியர் கெமுனு புலதுக்க ஆகியோரும் மற்றும் படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறை சந்திப்பில் ஈ. பி. டி. பி. இயக்கத்தின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார் என்றும் செய்திகள் தெரிவித்தன. [ஒ-எ-த]

அன்பான் துணை

புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பிதழ்

நிகழும் ஆங்கிரச வருடம் 14 ஆம் நாள் இன்று (30–10–92) வெள்ளிக்கிழமை காலை 9-29 மணி முதல் 10-27 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளை

ஸ்ரான்லி வீதி, 138 ஆம் இலக்கக் கட்டடத்தில்

"சிவசக்தி"

வியாபார நிறுவனத்தை ஆரம்பிக்க திருவருள் கைகூடியுள்ளது; அத்தருணம் எமது வாடிக்கையாளர் நண்பர்கள் அனைவரையும் சமூகந்தந்து திறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5534)

பங்காளர்கள்

New Science Academy

Jaffna.

93 A/L
WEEKEND
PAPER CLASS

Physics
Chemistry
Botany
Zoology
Pure/App. Maths

ஆரம்பம்:
01-11-92
SUNDAY

[இ-3643]

SHAMROCK

யாழ் சுண்டிக்குளி.

A/L 93
ZOO,
PAPER CLASS

திரு. A. ஞானேந்திரன்

ஆரம்பம்:
31 சனி 8-00 மு.ப.

[23079]

யாழ்ப்பாணக் கல்லூரி

JAFFNA COLLEGE
JESUS LIGHT OF CHRIST THE LIFE
CEYLON
1823 1872

வட்டுக்கோட்டை

பட்டப்படிப்புகள் பிரிவு

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி B. A; Part I விரிவுரைகள் 02-11-92 பி.ப. 5 00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி B. A. Part I விரிவுரைகளும் இதே தினம் ஆரம்பமாகின்றன.

★ 1993 — 1994 கல்வியாண்டிற்கான பேராதனைப் பல்கலைக்கழக முதற்கலை G. A. Q. விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. பதிவுகளுக்கு மாணவர்கள் முந்தவும்.

★ 1992 — 1993 கல்வியாண்டிற்கான பேராதனைப் பல்கலைக்கழக G. A. Q. மீட்டல் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

பொருளியல்	—	திரு. க. குமாரவேல்
அரசியல்	—	திரு. ச. சரவணன்
வெய்யியல்	—	திரு. யுகபாலசிங்கம்
தமிழ்	—	திரு. பொ. அருந்தவநாதன்
இந்துநாகரீகம்	—	செல்வி க. கலைச்செல்வி
வரலாறு — இறில் தன நாகரீகம்	—	லோறிஜ். எஸ். ஜெபநேசன்

[C/3645]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெறும் அரச ஊழியர்கள் செயலகத்துக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் கடமை ஆற்றி ஓய்வு பெறுபவர்கள் தாம் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பங்களை இனிமேல் யாழ். செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்கனவே பின்பற்றப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதியப் பணிகள் டிசம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாலேயே இவ்வாறு அறிவுறுத்தப்படுகின்றது.

எனவே இனிமேல் ஓய்வு பெறும் அரச ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நேரடியாகவே யாழ். செயலகத்துக்கு அனுப்பலாம்;

இதேவேளை—

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் ஓய்வூதியம் பெற்று வருபவர்களின் சுயவிபரக் கோவைகள்— மொத்தம் 18 ஆயிரம் — தபால் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட இருப்பதாகவும்—

கொழும்புக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் பல விண்ணப்பங்கள் கடந்த புதன்கிழமை மீண்டும் யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-3-100)

தொழில் நுட்பக் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து

99 வயதான இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி 1993 ஜனவரி முதல் பூரணத்துவம் உள்ள பல்கலைக்கழக அந்தஸ்துக்கு தரம் உயர்த்தப்படும்.

உயர்கல்வி அமைச்சர் சாகுல் ஹமீது முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஏனைய பல்கலைக்கழகங்களில் சேருவதற்கு பட்டங்களை போன்று இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியும் எடுத்த ஆண்டு முதல் பட்டங்களை வழங்கும் என்றும் அவர் அறிவித்தார். (இ-எ)

திடீர் பரிசோதனையின் போது பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிப்பு

தெல்லிப்பளை, அக். 30

கோப்பாய் பகுதியினரின் திடீர் பரிசோதனையின் போது பாவனைக்கு உதவாத பொருள்கள் கடைகளில் இருந்து கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கொக்குவில், கோண்டாவில், நல்லூர் ஆகிய பகுதிகளில் 50க்கும் அதிகமான கடைகளில் இத்திடீர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

திடீர் பரிசோதனைகளின் போது, பாவனைக்கு உதவாத குளூக்கோஸ், இனிப்புப்பண்டங்கள், பான் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில், கோண்டாவில், நல்லூர் சுகாதார பரிசோதகர் உதவியுடன் யாழ். மாவட்ட உணவு மருத்துவ கட்டுப்பாட்டாளர் திரு. ரி. மகாதேவன் இத்திடீர் பரிசோதனையை நடத்தினார். (இ-68)

இராமநாதன் கல்லூரி

சுன்னாகம்,

1. முதலாம் ஆண்டு
2. ஆறாம் ஆண்டு

மேற்படி இரு ஆண்டுகளுக்கும் விண்ணப்பங்கள் 30 11-1992 வரை ஏற்றுக் கொள்ளப்படும்; விண்ணப்பப்படிவங்களை ரூபா 25/- செலுத்தி கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஆறாம் ஆண்டு பிரவேசத்துக்கான பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்:

01 - 02 - 1987 — 31 - 01 - 1988 ஆம் திகதிக்கிடையில் பிறந்தோர் முதலாம் ஆண்டுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

- அதிபர்.

(கி-3640)

ஆசிரியர் சேவைக்கால கருத்தரங்கு

பண்டத்தரிப்பு கோட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு வலுப்புக்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்றும், மருதனார்மடத்தில் இயங்கும் யூனிபஸ் கல்லூரியில் எதிர்வரும் 8 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன. (இ)

27 பேர் ராஜினாமா

வலித்-காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து மேலும் 27 பேர் ராஜினாமாச் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

தேசிய தொழிற் பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 30

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் மின் இணைப்பு, குழாய்தொழில், மேசன், தச்சுத் தொழில் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான தரம் III, தரம் II கான தேசிய தொழிற் பரீட்சைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் யாவும் இங்கு வந்து சேர்ந்துவிட்டதாகவும்—

பரீட்சைக்கு விண்ணப்பித்து, அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய தொழிற் பரீட்சை அதிகாரி திரு. ம. சிவயோகசுந்தரத்தைச் சந்தித்து வேறு ஒரு திகதியில் பரீட்சையில் தோற்றலாம் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-153)

முதூர் பொலீஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற கான்ஸ்டபிள் சீருடை, ரவைகளுடன் கைது

கொழும்பு, அக். 30

முதூர் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ரிசர்வ் கான்ஸ்டபிள் ஒருவர் தப்பிச் சென்ற போது கைது செய்யப்பட்டார் என்றும்— அவரிடமிருந்து பொலீஸ் சீருடைகள் மற்றும் 84 மி.மி. ரக இருபது ரவைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது;

முதூரில் ஸ்ரீநகரில் உள்ள பொலீஸ் சோதனை முகாமில் பணிபுரிய அந்த கான்ஸ்டபிள் அனுப்பிவைக்கப்பட்டார் என்றும் அவர் அங்கு இருந்து தலைமறைவானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் தமது சொந்த ஊரான குருணாகலவுக்குச் சென்று கொண்டிருந்தபோது திருமலை-கண்டி நெடுஞ்சாலையில் ஆறாவது மைலில் உள்ள பொலீஸ் சோதனை முகாமில் வைத்து பிடிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

100 மாணவருக்கு நிட்சை

கொழும்பு, அக். 30

யாழ். மத்திய கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரி மாணவர்கள் 100 பேருக்கு சைவசமய திசை பிரதம குரு விநாயகமூர்த்தி குருக்களால் செய்து வைக்கப்பட்டது. (இ)

வெளிவந்துவிட்டது!

அறிவுக் களஞ்சியம்-5

226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

(கி-3736)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அங்கீகாரமற்ற அபிவிருத்திகள் தொடர்பான

அறிவுறுத்தல்கள்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மாநகரசபையின் அங்கீகாரம் பெறாமல் தற்காலிக கொங்கிறீட் அமைப்புக்கள் அதாவது மேற்கொள்ளப்படுகின்றன;

இவ்வாறான அமைப்புக்கள் நகரத்தில் ஏற்படுத்தப்பட்டுவருவதனால், நகரத்தின் சுகாதாரத்திற்கும், சுற்றுப்புறத்திற்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதுடன் தீவிபத்துச் சம்பவங்கள் அதிகரிப்பதுடன் வீதிப் போக்குவரத்துக்கும் இடையூறாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பெருமளவில் கட்டடங்கள் அழிக்கப்படுவதாலும், பொருத்தமான கட்டடப் பொருள்கள் இல்லாமையினாலும், இவ்வாறான அமைப்புக்கள் தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும், அவை ஒர் ஒழுங்கமைப்புக்குட்பட்டவையாகவும். மேற்கூறிய வாறான இடைஞ்சல்கள் முடிந்தளவுக்குக் கட்டுப்படுத்தப்படுவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துமுகமாக, மாநகரசபையின் திட்டமிடல் பிரிவு பொருத்தமான ஆலோசனைகளையும், அங்கீகாரத்தையும் வழங்குகின்றது.

ஆகவே தற்காலிக கொங்கிறீட் அமைப்புக்களை ஏற்கனவே நிறுவியவர்கள் உடனடியாக மாநகரசபையின் திட்டமிடல் பிரிவுடன் தொடர்புகொண்டு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவும். இவ்வாறான அமைப்புக்களை எதிர்காலத்தில் செய்ய உத்தேசித்திருப்பவர்கள் இதற்குரிய அனுமதியை முன்கூட்டியே மாநகரசபையின் திட்டமிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளவும்.

இதேபோன்று காணிகளுக்கு மண்போட்டு சீர் செய்யும் நடவடிக்கைகளுக்கும் இப்பிரிவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

உரிய அங்கீகாரம் பெறாமல் மேற்கொள்ளப்படும் எவ்வித நிர்மாண வேலையும், காணி அபிவிருத்தியும் அங்கீகாரமற்ற நடவடிக்கை எனக் கருதப்பட்டு அதற்குரிய சேவைக்கட்டணம் அறவிடப்படுவதுடன் மேல் நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28 - 10 - 1992.

(கி/3638)

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருஷம் ஐப்பசித் திங்கள் 16 ஆம் நாள் (01 - 11 - 1992) ஞாயிற்றுக்கிழமை காலை 9-15 மணி முதல் 10-25 மணிவரையுமுள்ள தனுலக்கின சுப முகூர்த்த வேளையில்,

எனது புதல்வன் திருநிறை செல்வன்
சரவணபவன்
(பிரதான பொறியியலாளர், கமநலசேவைகள் திணைக்களம், திருகோணமலை)
அவர்களுக்கும்

எமது புதல்வி திருநிறை செல்வி
புஷ்பராணி
(ஆசிரியை, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு நல்லூர் கிழக்கு கோவில் திருமண மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. க. கணேசலிங்கம்,
(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - கட்டடத் திணைக்களம்),
"தனபதி"
இணுவில் மேற்கு, சுன்னாகம்.

திரு. திருமதி து. அழகரத்தினம்,
(நிர்வாக அதிபர், நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்),
இல. 28, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட், கறிமிளகாய், கரட் விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல.251, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெறலாம். 07, கைலாசபிள்ளையார்கோவில் பின் வீதி, நல்லூர். [23042]

விற்பனையாகின்றது

சித்திரம் ஆண்டு 11, சைவ நெறி ஆண்டு 10-11 கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் [ஆறுபடை வீடு], கந்தபுராணம், உற்பத்தி காண்டம் இவையாவும் விற்பனையாளருக்கு தகுந்த கழிவுடன் வழங்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம் - புத்தகசாலை, யாழ்ப்பாணம். [23070]

மொத்தமாகவும், சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம். [23071]

அனுமதிப் பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 மாதிரி அனுமதிப் பரீட்சை 01-11-1992 ஞாயிறு முற்பகல் 8-00, முற்பகல் 10-00 நேரங்களில் நடைபெறும். ஆண்டு-6 அனுமதிக்கான துரித மீட்டல் பயிற்சியை விடைகளுடன் புதிய கல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல.219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [23076]

தேவை

அச்சகத்திற்கு கொம்போசிங், பைண்டிங் வேலைகள் தெரிந்த பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (யாழ் மாநகரசபை அருகில்) [23036]

விளாம்பழங்கள் தேவை

நன்றாக பழுத்த விளாம்பழங்கள் கொள்வனவு செய்யப்படும். விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சரபி உணவு பதனிடல் நிறுவனம், பிரதேசசபை முன் வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-3732)

இலவச திருமண சேவை

32 வயது, மிருகசீரிடம், உதயச் செவ்வாய், டென்மார்க்கில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அனுப்புபவர்கள் ஐரோப்பாவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [23041]

C. C. A.

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

பட்டப்படிப்புகள் பிரிவு

முதல் வணிக தேர்வு (First in Com)

வணிக தேர்வு I B. Com. Part I

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

01-11-1992

காலை 8 மணி

குறிப்பு: கணக்கியல் ஸ்ரீ B. Com. (Hons.)

முதல் வணிகத் தேர்வு வணிகத் தேர்வு-I

வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களிலும் நடைபெறும்;

மாணவர் வசதிக்கேற்ப திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் நேர ஒழுங்குகள் செய்து தரப்படும்;

— நிர்வாகி.

(சி 3747)

கலை, வர்த்தகக் கல்லூரி C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை

A/L 94 புதிய பிரிவு

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

கணக்கியல்	— திரு. ஸ்ரீ	8— 9
பொருளியல்	— திரு. உதயன்	9—10
வர்த்தகம்	— திரு. இரட்ணம்	7— 8
		10—11
இந்து நாகரிகம்	— திரு. ஜோதீஸ்வரன்	11—12
அளவையியல்	— திரு. சயந்தன்	1— 2
தமிழ்	— திரு. தங்கராசா	8— 9
புவியியல்	— திரு. வேலாயுதபிள்ளை	12— 1
அரசியல்	— திரு. பஞ்சு	7— 8
கிறிஸ்தவ நாகரிகம்	— செல்வி சாந்தி	11—12

ஆரம்பம்: 31 - 10 - 1992

குறிப்பு:

1. முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
2. பிரிவு I க்குரிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
3. பிரிவு II புதிய அலகில் இருந்து ஆரம்பமாகும்.

● விவரங்களுக்கு நேரில்;

— நிர்வாகி.

(சி-3731)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G. A. Q.; 1st in Com.
B.A. Part-1; B.Com. Part-1

- ★ பொருளியல்
- ★ அரசறிவியல்
- ★ இந்து நாகரிகம்
- ★ கணக்கியல்
- ★ முகாமைத்துவம்
- ★ அளவையியல்
- ★ மெய்யியல்
- ★ தமிழ்
- ★ புவியியல்
- ★ வர்த்தகம்
- ★ கணிதம்
- ★ ஆங்கிலம்

● திறமையான விரிவுரையாளர் குழுவினால் கற்பிக்கப்படும்;

● மேலதிக விவரங்களையும், நேர அட்டவணையையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்;

● 31 - 10 - 1992 இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். இதன் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

ஆரம்பம்; 01 - 11 - 1992

ஞாயிறு 9-00மணி

பாரதிதாசன் கல்வி நிறுவனம், (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3734)

Science Academy

NALLUR.

English Literature

G.C.E [A/L]
SAT. & SUN.
3-00 — 4-00

G.C.E [O/L]
SAT. & SUN.
4-00 - 5-00

By:
திரு. தெய்வதவபாலன்
(Dip. in Eng.)

ஆரம்பம்;
01-11-1992
SUNDAY — 3-00p m.

(சி-3748)

C. C. A.

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு III

A/L 93 DAY CLASSES

கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்:
03 — 11 — 1992
[காலை 8 மணி]

— நிர்வாகி.

(சி-3745)

5ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 22 — 05 — 1926

●

அநியாய அழிப்பு: 27 — 10 — 1987

அமரர் த. தருமலிங்கம்

[யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை- ஓய்வு பெற்ற அதிபர்]

திதி: 30 — 10 — 1992

என் கண்கண்ட தெய்வமே, அன்பின் திருவுருவே, ஆண்மையின் சிகரமே, ஆழ்கடல் வற்றினும் தங்கள் சிந்தனை குன்றா நவசிற்பியே, நந்தாவிளக்கே, அணையாத சோதியே, அணைந்துவிட்டதேனையா? காலமெல்லாம் கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்தீர்களே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்களே, அதனால் வானுறையும் தெய்வத்தார் தங்களை நல்விருந்தாக்கினார்களோ?

ஐந்தாண்டும் தாங்களில்லாத வாழ்வு தாமரையில்லாத தடாகம் போல் காட்சியளிக்கிறதையா, ஆ. இழந்த கன்றைப் போல் கதறிக் கதறி அலைந்து, அந்தகார இருளில் மூழ்கிக்கிடக்கும் என்னை அன்புக் கரங்கள் நீட்டி அணைக்க, தங்களையன்றி இவ்வுலகத்தில் வேறெவரும் இல்லையையா, இணைபிரியாத சோடிகள் என்ற வாக்கு பொய்யாகி விட்டதேனையா,

தங்கள் பேரப்பிள்ளைகள் தங்கள் எழில் வதனம் காணாது தவிக்கிறார்களே, தாய்ப் பாசத்தினால் சென்ற உங்களை நாசகாரர் தம் வலையுட் சிக்க வைத்தார்களே, அந்தோ! என் செய்வோம். தங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைவனுடனிருக்க அல்லும் பகலும் கண்ணீரால் இறைவனை வேண்டிக் கொண்டேயிருக்கிறோம்

தங்கள் பிரிவால் வாடிவதங்கும்:

ஆருயிர் அன்பு மனைவி,
திருமதி க. தருமலிங்கம்,
மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்.

"தருமபதி",
கே. கே. எஸ். றோட்,
கொக்குவில்.

[23048]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 — 11 — 1933

உதிர்வு: 14 — 11 — 1988

அமரர்

சரஸ்வதி சோதிப்பெருமாள்

திதி: 1992 — 10 — 30

எங்கள் வாழ்வு சிறக்க வேண்டும் என்று இறைவனை வழிபட்டாய், சிறப்பைக் காணாது எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த அம்மா! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் அகலாது; உமது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்!

கணவன், பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளை, உறவினர்கள்,

"சரஸ்வதி மகால்",
இணுவில்;

[23059]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

கடைசித் தாக்குதலா?

யாழ்ப்பாணத்தின் மீதான பெரிய தாக்குதலுக்கு ஆயுதப் படையினர் தயாராகி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பெருந்தாக்குதலுக்கு முன்னேற்பாடாக கடந்த மூன்று, நான்கு நாட்களாக விமானங்கள் குடாநாட்டின் வான்பரப்பில் அடிக்கடி பறந்து திரிகின்றன. பலாலிக்குத் துருப்புகளைக் கொண்டு வந்து சேர்க்கின்றன.

யாழ்ப்பாணத்தின் மீதான பெருந்தாக்குதலுக்கு முன்னோடியாகவே குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக விமானக் குண்டு வீச்சுகள் நடத்தப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு - கிழக்கு யுத்தம் இந்த வருட இறுதியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாசா சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் ஆடைத் தொழிற்சாலை திறப்பு விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார். அதேபோல, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் ஏதாவது ஒரு நிலைப்பாட்டை எய்துமாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் அரசாங்கம் அவகாசம் வழங்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவற்றை எல்லாம் ஒருசேர நோக்கும்போது, இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் அடுத்த வருட ஆரம்பத்திற்கு முன்னர் அரைவேக்காடாகவோ அல்லது கால் வேக்காடாகவோ ஏதோ வித அற்ப சொற்ப தீர்வு ஒன்றைத் தமிழர் மீது திணித்துவிட வெகுவாக அவசரப்படுகிறது எனக் கருதலாம்.

யாழ்ப்பாணத்தின் மீது பெருந்தாக்குதல் நடத்தப்படும் என்று பயமுறுத்தும் வேலையை ஆயுதப் படையினரும், அரசாங்கத்தினரும் ஒரு வருடத்துக்கு முன்னரே தொடங்கி விட்டனர். இந்த வருடம் ஜனவரியில் யாழ்ப்பாண நகரையும் சேர்த்து குடாநாட்டைக் கைப்பற்றி சிவில் நிர்வாகம் கொண்டுவரப்படும் என்று பேரமுரசும் அறையப்பட்டது.

ஆனால் அவர்கள் எண்ணியதைச் செய்ய இயலவில்லை. நினைத்தது நடக்கவில்லை. கடந்த பத்து மாதங்களில் அரச படையினர் கற்பனையும் செய்யாத அளவுக்கு அவர்கள் ஆளனி, ஆயுத இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது. தமது சகல வளங்களைத் திரட்டிப் போர்க்களம் புகுந்தும் குடாநாட்டில் சிறிய அளவிலேயே முன்னேற முடிந்தது.

ஆகஸ்டில் யுத்தங்களில் தாய் யுத்தத்தை நடத்த முனைந்த டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோர் கொலையுண்டதுடன் இராணுவம் பெட்டிப் பாம்பாகியது. இப்போது மீண்டும் சீறத் தொடங்குகிறது.

யாழ்ப்பாணத்தின் மீது பெருந்தாக்குதல் என்றால்— கடைசி யுத்தம் என்றால்— தமிழ்ப் பொது மக்களை ஆயிரம் ஆயிரமாகக் கொன்று குவிப்பது என அர்த்தப்படும். தமிழர்களை இன ஒழிப்புச்செய்வதென்ற தனது நோக்கத்தை அடைவதற்குச் சிங்களப் பேரினவாதம் எடுக்கும் மிகப் பெரும் முயற்சியாக அது அமையும்.

ஆனால் அதன் மூலம் அரசு வெற்றி அடைந்துவிட முடியும் என்பதல்ல. எங்கும் தமிழர்கள் தங்கள் சுதந்திரப் போராட்டத்தைத் தொடரவே செய்வர். அடக்குமுறையில் இருந்து விடுபட நினைத்த எவரும் தாம் நினைத்ததை எய்தும் வரை ஓய்வதில்லை என்பதே வரலாறு என்பதை அரசு புரிந்து கொள்ளுமா?

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கென

வட பகுதிக்கு 3,200 வலைகளை நோர்வே செஞ்சிலுவை வழங்கியது!

ஆனால் கூட்டுப்படை அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், அக். 30

வடபகுதியில் குடாநாட்டில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விநியோகிக்கவென நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் 3 ஆயிரத்து 200 கரை வலை மீன்பிடி வலைகளை வழங்கியது. இவற்றின் பெறுமதி 43 லட்சம் ரூபா வாகும்.

ஆனால் இந்த வலைகளை இங்கு எடுத்து வருவதற்கு கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்து விட்டது.

கரைவலை மீன் பிடித் தொழில் கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதால், அப்பகுதிகளில் பொறி வெடிகள், மிதிவெடிகள் போன்றவை வைக்கப்படலாம் என்று காரணம் காட்டியே கூட்டுப் படைத் தலைமையகம் வலைகளை வடக்கே எடுத்து வர அனுமதிக்கவில்லை எனக் கூறப்பட்டது.

எனினும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இந்த வலைகளை இங்கு எடுத்துவர தொடர்ந்தும் முயற்சி செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இவை இங்கு எடுத்துவரப்பட்டால், பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 200 மீனவக் குடும்பங்கள் நன்மைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

அனுமதிப் பரீட்சை நடக்கும்

யாழ்ப்பாணம், அக். 30

ஆண்டு - 6 அனுமதிக்கு அங்கீகரிக்கப்பட்ட 25 பிரபல்ய பாடசாலைகளில் இப்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளும் இங்கேயே இயங்குவதால் அவற்றுக்கும் போட்டிப் பரீட்சை நடக்கும் என அறிவிக்கப்படுகிறது.

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித்தியாலயம் இப்போது யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இயங்கி வருகிறது. அப்பாடசாலைக்கும் ஆண்டு- 6 வகுப்புக்கு அனுமதிப் பரீட்சை வைக்கப்பட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று வித்தியாலய வட்டாரங்கள் உதயனுக்கு தெரிவித்தன. (அ)

தேரோ கொலைச் சம்பவம்; பிக்கு மீது வழக்கு தாக்கல்

தந்திரிமலை ரஜமகாவிகாரையின் பிரதமகுரு விமலகீர்த்தி ஸ்ரீ சுமன குடாகோங்கஸ்கட விமலஞான தேரோ கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரகசியப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட இளம் பிக்குவான நககரவாவே பஞ்ஞாகீர்த்தி தேரோ (20 வயது) மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடர பொலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வாரம் வழக்குத் தாக்கலாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தந்திரிமலை விகாராதிபதி கடந்த ஜூலை 21ஆம் திகதி தமது அறையில் இருந்த சமயம் கிரேனேட் வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. (ஒ-10)

இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் அக். 30

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே யாழ். கல்வித் திணைக்களம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் — 19 வயதுப் பிரிவில் — இன்று மாலை 4 ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

மத்திய கல்லூரியில்

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் வட்டு. இந்து அணியை எதிர்த்து ஸ்கந்தா அணியும் ஜினகரத்தினம் ம. ம. வி. அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் அணியும் மோதும்.

பல்கலைக்கழக மைதானத்தில்

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து புங்குடுதீவு ம. ம. வி. அணியும், உரும்பராய் இந்து அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணியும் மோதும். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 30

கோண்டாவில் வடக்கு கலைவாணி விளையாட்டுக் கழகம் — கழக மைதானத்தில் நடத்திவரும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றும் மற்றொரு காட்சி ஆட்டம் ஒன்றும் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

காட்சி ஆட்டத்தில் உரும்பராய் சென். மைக்கல் அணியை எதிர்த்து உரும்பராய் உதயசூரியன் அணி மோதும்.

அரையிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஸ்ரீ முருகன் அணியை எதிர்த்து திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக்கழக அணி மோதும்.

மனித உரிமை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் மனித உரிமை இயக்கங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதற்கிடையில் —

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் கொக்கட்டிச்சோலை படுகொலைகள் பற்றிய இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எப்படி நியாயப்படுத்த முடியும் என அரச தரப்பு அதிகாரியிடம் கேட்கப்பட்டபோது, என்ன கூறுவது என்பது பற்றித் தாம் இன்னமும் சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார் என்று கொழும்பு பி. பி. ஸி. செய்தியாளர் கூறினார். (ஒ-10-5)

இன்று

யாழ்ப்பாணம், அக். 30

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கல்விக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். "தென் நாட்டில் பல்லவர் கால சமய நிலை" என்னும் பொருளில் திருமதி அருள்நந்தி கருத்துரை வழங்குவார். (த)

★ ★ ★

கொழும்புத்துறை, அக். 30

தென் மட்டுவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பயிற்சி நிலையம் இன்று திறந்து வைக்கப்படும்.

தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார். (உ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். திருநெல்வேலி சைவத் தொண்டர் நிலையத்தின் மூன்றாவது ஆண்டு கொடித்தினம் இன்று காலை 10 மணிக்கு நிலையத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கமும், நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் திரு. பொ. கனகசபாபதியும் பங்குபற்றுவர். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

தென்மராட்சிப் பகுதிகளில் நாளை மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக் 30

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் விடுதலைப்புலிகளின் நிதித்துறையினர் தமிழீழ மீட்பு நிதியை சேகரித்து வருகின்றனர்.

அந்த வரிசையில் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவுகளில் மீட்புநிதி சேகரிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி மக்களிடம் இருந்து நாளை முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணி வரை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும் — முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் —

பின்னர் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் —

பச்சிலைப்பள்ளி மக்களிடம் இருந்து நாளை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் வைத்து மீட்புநிதி சேகரிக்கப்படும் என்று நிதித்துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

கிளாலிப் போக்குவரத்தில் பயணிகள் பெரும் பீதி

படையினர் கடலில் அடிக்கடி சூடு

கிளாலிக் கடற்பகுதியில் பயணம் செய்வோர் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே போக்குவரத்தில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

படகுகள் நடுக்கடலில் சென்று கொண்டிருக்கும் வேளைகளில் திடீரென குறுக்கிடும் கடற்படையினர் கண்டபடி வேட்டுக்களைத் தீர்ப்பதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு அக்கரையில் இருந்து கிளாலி நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த படகுகள் மீதும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்றும் —

இந்தச் சம்பவத்தின்போது அதிர்ஷ்டவசமாக தாம் ஒருவாறு தப்பி வந்ததாகவும் சாவகச்சேரியைச் சேர்ந்த கணேஷ் என்பவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

கொழும்பில் இருந்து வந்த பயணிகள் பலர் இன்னும் கிளிநொச்சிப் பகுதியில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-17-186)

சர்வதேச செஞ். அதிகாரி நிலைமைகளை ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ்ப்பாணம் வந்துள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஜெனிவா அதிகாரி திரு. ஜூனோத் கைதடிப் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாம்களை நேற்றுப் பார்வையிட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை கேட்டறிந்த அவர், ஆஸ்பத்திரிப் பாதுகாப்பு வலயத்தையும் பார்வையிட்டார்.

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்கள் இறக்கும் வேளையில் உள்ள சிக்கல்கள் குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

இன்று மாலை 'குமண' கப்பல் மூலம் திருமலை புறப்படும் அவர் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்ட நிலைமைகளையும் ஆராய்வார். (உ)

இன்று 'குமண' புறப்பாடு

யாழ்ப்பாணம், அக். 30

பருத்தித்துறையில் தரித்துள்ள 'குமண' கப்பல் இன்று மாலை திருகோணமலைக்கு செல்லவிருக்கிறது.

கொழும்பு செல்லும் அரச ஊழியர்கள் இந்தக் கப்பலில் திருமலைக்குச் செல்வர்.

திருமலை செல்லும் 'குமண' கொழும்பில் சிகிச்சையை முடித்துக் கொண்டு திருமலை வந்து சேரும் யாழ். பயணிகளை அங்கிருந்து ஏற்றிக் கொண்டு நாளை மறுதினம் மீண்டும் பருத்தித்துறையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

மாவீரர் குடும்பங்களின் இருப்பிட விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக் 30

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வசித்து வரும் மாவீரர் குடும்பங்கள் தமது இருப்பிடங்கள் பற்றிய விவரத்தை அயலில் உள்ள மாவீரர் பணிமனை [illegible]

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டும், மாதாந்தம் நடைபெற்று வரும் மாவீரர் வீரவணக்க நிகழ்வுகளை முன்னிட்டும் இவ்விவரங்கள் தேவைப்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மாவீரர் பணிமனை தெரிவித்திருக்கிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதடைந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியும் என்றும் கருதப்பட்டது.

எனினும் நிவாரணத்துக்கு ஒரு தடவை அந்தக் கௌபி வழங்கப்பட்டது. அதனைப் பாவித்துப் பார்த்த பொதுமக்கள் இனிமேல் அதனை விநியோகிக்க வேண்டாம் என்று முறையிட்டனர்.

பழுதடைந்த கௌபியை பரிசோதனை செய்த சுகாதாரப் பகுதியினர் அது மனித பாவனைக்கு உகந்ததல்ல என்று தெரிவித்திருந்தனர். தொடர்ந்து செயலகம் பழுதடைந்த கௌபியை விநியோகித்து வருகிறது. நிவாரணத்துக்கு மட்டுமன்றி பழுதடைந்த கௌபியை பணத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனையை உதாசீனம் செய்து பழுதடைந்த கௌபியை பொதுமக்களுக்கு விற்பதன் மர்மம் என்ன? செயலகத்துக்கு நஷ்டம் வராமல் தம்மீது "கட்டி அடிக்கும்" கைங்கரியமா என்று பொதுமக்கள் கேள்வி கேட்கிறார்கள்! (அ-3)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்

நற்செய்திக் கூட்டம்

அருளுரையாளர்

அருள்திரு கலாநிதி டயான்சந் கார்

REV. DR. DHAYANCHAND CARR

(உப அதிபர் தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை)

★ 30-10-92 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி பரி பேதுரு மெதடிஸ்த ஆலயம், யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(கி-3742)

யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை

(இணுவில் மத்திய கல்லூரியில் பின்னேரப் பாடசாலையாக இயங்குகின்றது.)

ஆண்டு - 6 அனுமதிக்கான பிரவேசப் பரீட்சை - 1993

1) பரீட்சை நடைபெறும் தினம்:- 14-11-92 சனிக்கிழமை
2) இடம்:- இணுவில் மத்திய கல்லூரி.
3) விண்ணப்பப்படிவத்தை இணுவில் மத்திய கல்லூரியிலுள்ளனது அலுவலகத்தில் பி.ப 2.00 — பி.ப 4.00 மணிக்குமிடையில் 30/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
4) விண்ணப்ப முடிவு திகதி:- 4-11-92

க. நாகராசா.
(அதிபர்)

(கி-2515)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

ஆண்டு 6 அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை-1993

1. பரீட்சை நடைபெறும் திகதி 14-11-1992, சனிக்கிழமை
2. பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை 30-10-92 வெள்ளிக்கிழமையிலிருந்து ரூபா 25/- செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்ப முடிவு திகதி 04-11-1992 புதன்கிழமை
4. பரீட்சிக்கப்படும் பாடங்கள்: கணிதம், தமிழ்
5. அனுமதி அட்டை பெறும் திகதி: 11-11-1992 புதன்கிழமை

கந்தரோடை,
சுன்னாகம்.

ப. விக்கினேஸ்வரன்
அதிபர்

(C/2514)

அவசர பொதுக்கூட்டம்

அனைத்துச் சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்குமான முக்கிய விடயம் சம்பந்தமான அவசர பொதுக்கூட்டம் இன்று (30-10-1992) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சித்த மருத்துவத்துறையில் நடைபெற உள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சித்த மருத்துவத்துறை மாணவர் மன்றம்,
யாழ் பல்கலைக்கழகம்

(23078)

பாப்பரசர் ஓய்வு பெறுவார்?

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் விரைவில் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறக்கூடும் என வத்திக்கான் வட்டாரங்களில் இருந்து அறியவருவதாக ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மருத்துவபீட மாணவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர், ராகிங் தடை செய்யப்பட்டிருப்பதால் புதிய மாணவர்கள் யாருக்கும் பயப்படாமல் சைக்கிளில் ஓடிச் செல்லலாம் என்று கூறியதாகவும்—

எனினும் புதிய மாணவர்கள் அதனை ஏற்காமல் தொடர்ந்து சைக்கிளை உருட்டிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து மேற்படி அதிகாரி மருத்துவபீட காவலர்களை அழைத்து, சைக்கிளை உருட்டிச் சென்ற புதிய மாணவர்களின் சைக்கிள் டயர்களில் இருந்து காற்றைத் திறந்து விடுமாறு பணித்ததாகவும்—

காவலர்கள் சைக்கிள் டயர்களில் காற்றைத் திறந்து விட்ட பின்னர், டயர்களின் "வால்வ்" கட்டைகளை மருத்துவபீட அதிகாரியிடம் ஒப்படைத்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்தே மருத்துவ பீடத்தின் புதிய மாணவர்களும் மற்றைய ஆண்டு மாணவர்களும் ஒன்று சேர்ந்து மறியல் போராட்டத்தை நடத்தினர்.

மருத்துவ பீட அதிகாரியின் செயலைக் கண்டித்து மருத்துவ பீடத்தின் அனைத்து மாணவர்களும் ஒன்றுசேர்ந்து வகுப்புக்களைப் பகிஷ்கரித்து இந்த மறியல் போரை நடத்தியதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மறியல் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது மருத்துவ பீடத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம், மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

நேற்று மாலை 5.30 மணியளவில், துணை வேந்தரின் பிரதிநிதி ஒருவர் மறியலில் ஈடுபட்ட மாணவர்களுடன் பேச்சு நடத்தியதை அடுத்து மறியல் போராட்டம் இடைநிறுத்தப்பட்டதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் திங்கட்கிழமை கூடி நிலைமையை ஆராயும் என்று தெரியவருகிறது.

(உ-3-162-97)

19 இராணுவத்தினர்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

குடலிகம மீதும் அவரது கட்டுப்பாட்டில் இருந்த 19 படையினர் மீதும் இராணுவ நீதிமன்றத்தில் மூன்று குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

தமது படையினரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க லெப்டினன்ட் குடலிகம தவறிவிட்டார் என்பது முதலாவது குற்றச் சட்டாகும். இக்குற்றச் சாட்டில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இவரது கட்டுப்பாட்டில் இருந்த படையினர் மகிழடித்தீவு, முதலைக்குடா ஆகிய பகுதிகளில் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்பது இரண்டாவது குற்றச்சாட்டாகும் இக்குற்றச் சாட்டில் இருந்து லெப்டினன்ட் குடலிகம விடுவிக்கப்பட்டார்.

கொக்கட்டிச்சோலை தமிழர்களின் உயிர்கள், உடைமைகள் அழிக்கப்பட்டதற்கும் கொலையுண்ட தமிழர்களின் சடலங்கள் எடுக்கப்பட்டதற்கும் லெப்டினன்ட் குடலிகமவே பொறுப்பு எனத் தெரிவிக்கப்பட்ட மூன்றாவது குற்றச் சாட்டில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இத்தகவல்களை கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

(ஒ-எ-10)

யாழ். செயலகத்துக்கு பணக் கஷ்டம் வரும்!

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்படும் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை யாழ். செயலகம் தனது செலவுகளுக்குப் பயன்படுத்த முடியாது.

இதற்கான பணிப்புரை யாழ். செயலகத்துக்குக் கொழும்பிலிருந்து கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு அனுப்பப்படும் பொருள்களை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தை செயலகத்தின் செலவுகளுக்குப் பயன்படுத்துவதற்கு புனர்வாழ்வு அமைச்சு முன்னர் அனுமதி வழங்கி இருந்தது.

ஆனால், பொருள்கள் விற்கும் பணத்தைத் தமக்கு அனுப்புமாறு புனர்வாழ்வு அமைச்சு இப்போது பணிப்புரை வழங்கியுள்ளது.

இதனால் யாழ். செயலகம் பெரும் பண நெருக்கடியை எதிர்நோக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (அ-3)

மரண அறிவித்தல்கள்

சிவஸ்ரீ இ. நாகேந்திரக்குருக்கள் [இராசப்பா]

(கிளிநொச்சி, உருத்திரபுரம், சிவநகர்)

சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் 27-10-92 அன்று உருத்திரபுரத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற இரத்தினக்குருக்கள் சரஸ்வதி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், குமாரலட்சுமி (லலிதா) அவர்களின் அன்புக் கணவரும், இரட்னேஸ் (பிரபா-ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), சந்திரவித்தியா (பபி-கச்சேரி, கிளிநொச்சி), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமசாமிக் குருக்கள் ஆனந்தம்மா அவர்களினது மருமகனும், ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. வரதராஜேஸ்வர சர்மா

மயிலணி,
சுன்னாகம்.

(5414)

சின்னையா ஏரம்பமூர்த்தி (மகாலிங்கம்)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 166/2, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும், 94, பாங்சால் வீதி, சுதாஹவுஸ் உரிமையாளரும் ஆகிய சி. ஏரம்பமூர்த்தி 29-10-1992 இல் கொழும்பில் காலமானார்.

இவர் நவநீதத்தின் அன்புக் கணவரும், சுதர்ஜினி, சிவதர்கினி, அருட்செல்வி, அருட்செல்வன், அருட்பிரசன்னா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னையா, இராசம்மா அவர்களின் மகனும், நாகமுத்துவின் பெறாமகனும், காலஞ்சென்ற தம்பிமுத்து, தெய்வாலைப்பிள்ளையின் மருமகனும், காலஞ்சென்ற நாகநாதி, நாகம்மாவின் மருமகனும், பராசக்தி, சிவபாலன், சமலாதேவி, திருநாவுக்கரசு, சிவானந்தன், பரமானந்தன், அருளானந்தன், நித்தியானந்தன், உமாதேவி சதானந்தன் ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி, மனோகரன் (யாழ். பிரபல வர்த்தகர்), மனோன்மணி சண்முகலிங்கம், திலகவதி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
த. மனோகரன்

235, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(23082)

கந்தையா வீரசிங்கம்

(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட் கந்தையா வீரசிங்கம் அவர்கள் 1992-10-29 ஆம் திகதியன்று காலமாகிவிட்டார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 1992-10-30 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்.

"இராணி பவனம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(23083)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [illegible] விமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-10-92 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org